பொதுத்துறை நிறுவனங்களின் தொழிலாளர்களின் நலனுக்காக தேசியப் புத்தாக்க நிதி (National Renewal Fund) ஒன்றினை 1992 பிப்ரவரியில் உருவாக்கியுள்ளனர். தொழிலாளர்களின் மறு பயிற்சிக்காகவும் மறு, வேலை வாய்ப்புக்காகவும், ஆலோசனை கூறுவதற்காகவும் திட்டங்களை வகுத்துள்ளனர். அதிகமாகப் பணியாளர்கள் இருந்து, அவர்கள் தன்விருப்ப ஒய்வு பெற்றால் அவர்களுக்கு தேசிய புத்தாக்க நிதி (NRF) மூலம் உதவி வழங்கத் தீர்மானித்து, 1992-93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மத்திய அரசு இதற்காக ரூ.700 கோடியும், 1993 டிசம்பரில் கூடுதல் தொகையாக ரூ. 320 கோடியும் ஒதுக்கியுள்ளது. 1993 அக்டோபர் வரை தன்விருப்பமாக ஓய்வு பெற்ற 60,000 பணியாளர்களுக்காக ரூ.786.24 கோடி வழங்கியுள்ளனர்.

# 34. பன்னாட்டுக் கழகங்கள்
## (MULTINATIONAL CORPORATIONS)

பன்னாட்டுக் கழகங்கள் என்பவை ஒரு நாட்டில் தலைமையகம் இருந்தாலும் பல நாடுகளில் பரந்துவிரிந்திருக்கும் மிகப்பெரிய நிறுவனங்களாகும். இவற்றை உலக நிறுவனங்கள் (Global Companies) என்றும், நாடுகளைச் சூழ்ந்த நிறுவனங்கள் (Extranational Enterprises) என்றும், நாடுகளை ஊருவிநிற்கும் நிறுவனங்கள் (Transnational Corporations) என்றும் பல வகையாகப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

**விளக்கம்:** ஆலமரம்போல, ஒரு நாட்டில் வேரூன்றி, பல நாடுகளில் விழுதுகளை ஊன்றி, கிளைகளைப்பரப்பி. பல வகையான வாணிபங்களைச் செய்கின்ற நிறுவனங்களைப் பன்னாட்டுக் கழகங்கள் என்று கூறலாம். இத்தகைய நிறுவனங்கள் சொத்துக்கள். தொழிற் சாலைகள், சுரங்கங்கள், விற்பனை ஆகியவற்றை ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் வைத்திருக்கும்.

பல நாடுகளில் நிர்வாகம். உற்பத்தி. விற்பனை ஆகியவற்றை நாடுகளின் எல்லைகளைக் கடந்து நடத்துகின்ற பன்னாட்டுக் கழகங்களின் செல்வாக்கு இன்று உலக அரங்கில் வளர்ந்து வருகின்றது.

**இயல்புகள்:** பன்னாட்டுக் கழகங்களின் இயல்புகளைத் தொகுத்துக் கூறலாம்.

**1. மிகப்பெரிய நிறுவனம்:** பன்னாட்டுக் கழகம் அளவில் மிகப்பெரியதாக, பூதாகரமான (Gigantic) நிறுவனமாக இருக்கும். அதனுடைய சொத்துக்கள், வாணிப அளவு பல கோடிகளில் அமையும். பேராசிரியர் ரேமாண்ட் வெர்வன் (Raymond Varvanb) ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் மொத்த விற்பனை 100 மில்லியன் டாலருக்கு மேலிருக்கும் என்று கூறுகின்றார். இதிலிருந்து பன்னாட்டு நிறுவனத்தின் அளவை நாம் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளலாம்.



**2. சிலமுனைப் போட்டி:** பன்னாட்டு நிறுவனங்கள் சில முனைப் (Oilgopolistic) போட்டிகளைக் கொண்டவ்வைகளாக இருக்கும். அதாவது சில நிறுவனங்களால்தான் அவற்றோடு போட்டியிட முடியும். ஆதலால் அவை போட்டிகளை நசுக்கி முற்றுரிமை பெற்ற நிறுவனங்களாக வளரும் போக்குக் கொண்டவைகளாக இருக்கும்.

**3. உலகளாவிய நடவடிக்கைகள்:** பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டுக்கு வரையறை இல்லை. இவை எல்லா நாடுகளிலும் தங்களது கிளைகளைப் பரப்ப முயலும். காலூன்ற இடம் கிடைத்தால்போதும். அங்கு தனக்கென்றொரு நிலையான இடத்தை விரைவாக ஏற்படுத்திக்கொள்ளும் ஆற்றல் இத்தகைய கழகங்களுக்கு உண்டு.

**4. வளங்களை இடம் மாற்றுதல்:** உலக நாடுகளில் கிடைக்கும் மூலவளங்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மாற்றும் ஆற்றல் பெற்றவைகளாக பன்னாட்டுக் கழகங்கள் இருக்கும். ஆதாய நோக்கில் அங்காடிகளைக் கைப்பற்ற, மூலவளங்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மாற்ற இவை தயங்குவதில்லை. அதற்கான வழி முறையை எளிதாக உருவாக்கிவிடும்.

**5. மிகுதியாக நிதிவளம்:** பன்னாட்டுக் கழகங்கள் மிகுந்த நிதிவளத்தோடு செயல்படுகின்றன. உலகெங்கும் இருக்கின்ற மூலதன அங்காடியோடு தொடர்புகொண்டு நிதியினைப்பெற முடியும். மேலும் அதிக அளவில் கிடைக்கின்ற ஆதாயத்தைப் பயன்படுத்தி எங்கு வேண்டுமானாலும் சொத்துக்களை வாங்கி, வாணிபத்தை விரிவடையச் செய்ய இவற்றால் முடியும்.

**6. சொந்தமான வளர்ச்சி:** பன்னாட்டுக் கழகங்களுக்குத் தூண்டுதல் தேவையில்லை. அவை எங்கு வாணிப, தொழில் வாய்ப்பு இருக்கின்றதோ அங்குதானே சொந்த முயற்சியில் முன்வந்து பங்குபெறும். பெரும்பாலான பன்னாட்டுக் கழகங்கள் தற்சார்புடையவனவாக உள்ளன.

**7. புத்தாக்க உற்பத்தி:** பன்னாட்டுக் கழகங்கள் உலகம் முழுவதும் வளர்ந்திருக்கும் அறிவியல் தொழில் நுட்பத்தை அறிந்து, உற்பத்தியில் பயன்படுத்துகின்றன. இதனால் புத்தாக்க முறையில் பொருட்களை உற்பத்தி செய்வதோடு, புதுப்புதுப் பொருட்களையும் உற்பத்தி செய்கின்றன. இதனால் பொருள் உற்பத்தியில் உள்நாட்டுத் தொழில்களால் இவற்றோடு போட்டிபோட முடிவதில்லை.

**8. அங்காடிகளைக் கைப்பற்றுதல்:** பன்னாட்டுக் கழகங்கள் தங்களது பொருட்களின் தரத்தின் மேன்மையாலும், புதிய விற்பனை முறைகளாலும், பேரளவு விளம்பர உத்திகளாலும் உலக அங்காடியை எளிதாகக் கைப்பற்றி விடுகின்றன.

Scanned with CamScanner

**9. சொத்துடமையும் கட்டுப்பாடும்:** பன்னாட்டுக் கழகங்கள் செயல்படுகின்ற இடங்களில் எல்லாம் அவற்றிற்குச் சொத்துக்கள் இருக்கும். அவை ஏற்று நடத்துகின்ற நிறுவனங்கள் அவற்றின் கட்டுப் பாட்டிற்குள் இயங்கும். இதனால்தான் பன்னாட்டுக்கழகங்கள் மிகுந்த சக்தி வாய்ந்தவைகளாகத் திகழ்கின்றன.

**நமது நாட்டில் பன்னாட்டுக் கழகங்களின் வளர்ச்சி:** நமது நாடு மிக நீண்டகாலத்திற்கு முன்பே பன்னாட்டு கழகத்தின் வளர்ச்சியைக் கண்ட நாடு. இங்கு வாணிபம் செய்ய வந்த கிழக்கிந்திய நிறுவனம் (East India Company) நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியது கடந்தகால வரலாறு. நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாடுகளைச் சேர்ந்த பன்னாட் டுக் கழகங்கள் இந்தியாவில் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்கள்.

நமது நாட்டில் பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிப்பது பற்றி மிகுந்த கருத்து வேறுபாடு உள்ளது. அவை இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை செய்கின்றனவென்று ஆதரவாளர்களும், அவற்றின் செல்வாக்கு அன்னிய ஆதிக்கத்தைக் கொண்டு வருமென்று எதிர்ப்பாளர்களும் வாதிடுகின்றனர். இந்தப் பின் புலத்தில் பன்னாட்டுக் கழகங்களின் நிலையை ஆராய்வது தேவையாகின்றது.

1973-74 இல் நமது நாட்டில் பன்னாட்டுக் கழகங்களின் கிளைகள் 540 இருந்தன. இவற்றின் சொத்துக்கள் ரூ. 1,790 கோடி. இந்த நிறுவனங்களில் 319 (59%) இங்கிலாந்தைச் சார்ந்தவை. 88 நிறுவனங்கள் அமெரிக்காவைச் சேர்ந்தவை. மொத்தத்தில் 407 நிறுவனங்கள், அதாவது சுமார் 75 சதவிகிதம், இங்கிலாந்து, அமெரிக்காவிற்குச் சொந்தமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

1978-79 இல் நமது நாட்டிலிருந்த பன்னாட்டுக் கழகங்களின் கிளைகளின் எண்ணிக்கை 358 ஆகக் குறைந்தது. ஆனால் இவற்றின் சொத்துக்களின் மதிப்பு ரூ. 2,401 கோடியாக உயர்ந்தது. இவற்றில் இங்கிலாந்தைச் சார்ந்தவை 253. இங்கிலாந்து-அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்கள் 71 சதவிகிதம்.

1991 இல் இந்திய அரசு தாராளமய தொழில் கொள்கையை அறிவித்த பிறகு இந்திய நிறுவனங்களோடு சேர்ந்து வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்யவும், தொழில்களைத் தொடங்கவும் இந்திய அரசு அனுமதிக்கின்றது. இதனால் 1991 ஆகஸ்டு முதல் 1993 நவம்பர் வரை 3,467 வெளி நாட்டோடு இணைந்த திட்டங்களுக்கு அரசு அனுமதியளித்திருக்கின்றது. இவற்றின் மூலமாக ரூ.122.9 பில்லியன் வெளிநாட்டு முதலீடு வருமென்று எதிர்பார்க்கின்றனர்.



**பன்னாட்டு கழகங்களின் ஆக்கப்பூர்வமான விளைவுகள்:** கடந்த காலத்தில் நமது நாட்டில் பன்னாட்டுக் கழகங்கள் சில ஆக்க பூர்வமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளனவென்று ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டுவதைத் தொகுத்துக் கூறலாம்.

**1. பல்வகைத் தொழில் வளர்ச்சி:** பன்னாட்டுக் கழகங்கள் பலவகையான தொழில்கள் தோன்றி வளரத்துணை செய்து, நமது நாட்டின் தொழில் அடிப்படையை வலுவாக்கியுள்ளன. நாடு விடுதலை பெற்ற பொழுது இரண்டு எஃகு ஆலைகள் தவிர மற்றவை எல்லாம் நுகர்பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில்களாகவே இருந்தன. ஆனால் பன்னாட்டுக் கழகங்களின் துணையோடு பெட்ரோலியம் சுத்தி கரிப்பு, இரசாயன, மருந்து உற்பத்தித் தொழில்கள், பொறியியல், எஃகு, செயற்கை நார் உற்பத்தி போன்று பல தொழில்களை வளர்க்க முடிந்தி ருக்கின்றது. இதனால் நமது தொழில் வளர்ச்சியின் அடிப்படை விரிவடைந்திருக்கின்றது.

**2. மூலதன ஆக்கம்:** இந்தியாவில் மூலதனம் பெருக பன்னாட்டுக் கழகங்கள் குறிப்பிடத்தக்க வகையில் உதவியுள்ளன. இந்திய நிறுவனங்களைவிட இவற்றின் இலாபம் அதிகம். அதனால் இவற்றால் மூலதன ஆக்கத்திற்கு உதவ முடிகின்றது. பன்னாட்டுக் கழகக் கிளைகளின் சொத்துக்களின் மதிப்பு 1969-இல் ரூ.1,129 கோடியாக இருந்தது. 1976 இல் ரூ. 1. 626 கோடியாகக் கூடியுள்ளது.

**3. தொழில் நுட்ப மேம்பாடு:** பன்னாட்டுக் கழகங்கள் இந்தியத் தொழில்களின் தொழில் நுட்பமேம்பாட்டிற்கு உதவியுள்ளன. வளர்ச்சிபெற்ற நாடுகளிலிருக்கும் உயரிய எந்திரங்களையும், கருவி களையும் இங்கு கொண்டுவந்து சேர்த்துள்ளன. இவற்றின் ஆராய்ச்சிப் பிரிவுகள் நமது நாட்டுத் தொழில் மேம்பாட்டிற்கு ஆக்கமளித்துள்ளன.

**4. பல்வகைப் பொருள் உற்பத்தி:** இந்தியாவில் பல்வேறு வகையான பொருட்களை உற்பத்தி செய்யப் பன்னாட்டுக் கழகங்கள் வழிவகுத்துக்கொடுத்துள்ளன. பல வெளிநாட்டு நிறுவனங்கள் பல் வகைப் பொருட்களை உற்பத்தி செய்கின்றவைகளாகவும், பல தொழில் களை நடத்துகின்றனவாகவும் மாறின. எடுத்துக்காட்டாக இந்தியப் புகை யிலை நிறுவனம் உணவுவிடுதிகளை அமைத்ததையும், இந்தியா வின் யூனியன் கார்பைடு (The Union Garbide of India) வேளாண்மைப் பொருட்கள், கடல்பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டதையும் கூறலாம்.

**5. அன்னியச் செலாவணியைப் பெறுதல்:** பன்னாட்டுக் கழகங்கள் ஏற்றுமதியைப்பெருக்கி அன்னியச் செலாவணியைப்பெற உதவுகின்றன. 1975-76 இல் 133 வெளிநாட்டுத் துணை நிறுவனங்கள் ரூ. 120 கோடி அன்னியச் செலாவணியை, தேயிலை, புகையிலை, தோல்

பொருட்கள், பக்குவப்படுத்தப் பெற்ற உணவுப்பொருட்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் தேடிக்கொடுத்திருக்கின்றன.

**பன்னாட்டுக் கழகங்களின் குறைகள்:** பன்னாட்டுக் கழகங்களினால் சில நன்மைகள் கிடைப்பதாக அவற்றின் ஆதரவாளர்கள் கூறியபோதிலும், அவற்றிலுள்ள குறைகளால் தீமைகளே மிகுதியாகக் கிடைப்பதைத் திறனாய்வாளர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர். அவற்றை அறிந்துகொள்ளலாம்.

**[1] நமது தொழில் நுட்பவளர்ச்சி பாதிக்கப்படல்:** பன்னாட்டு நிறுவனங்கள் வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்த துறைகளில், நமது நாட்டுச் சூழலுக்கேற்ப வளர வேண்டிய உள்நாட்டுத் தொழில் நுட்பம் முடங்கிவிட்டது. எந்திரங்களையும் கருவிகளையும் அப்படியே இறக்குமதி செய்ததால், அவற்றை நமது நாட்டில் உற்பத்தி செய்யும் முயற்சி பின்னடைவு பெற்றது. இதுநமது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கேற்பட்ட பெரிய இழப்பாகும்.

**[2] கழிக்கப் பெற்ற தொழில் நுட்பம்:** பன்னாட்டுக் கழகங்கள் நமது நாட்டிற்குக் கொண்டுவந்த தொழில் நுட்பங்கள் எல்லாம் புதியனவென்று கூறமுடியாது. வெளிநாடுகள் கழித்த, பழமையான தொழில் நுட்பங்களை சில வேளைகளில் கொண்டுவந்தன. தேவைக்கு அதிகமாகவே வெளிநாட்டு எந்திரங்களையும் கருவிகளையும் இறக்குமதி செய்துள்ளன. இதனால் நமக்கு ஏற்பட்ட அன்னியச் செலாவணி இழப்பு குறிப்பிடத்தக்காகும்.

**[3] ஆதாய நோக்கோடு மட்டும் செயல்படல்:** பன்னாட்டுக் கழகங்கள் நமது நாட்டில் எந்தெந்த தொழிலில் மிகுதியாக ஆதாயம் கிடைக்குமோ அந்தந்த தொழில்களில் மட்டும்தான் ஈடுபட்டன. இலாபம் குறைந்த, மக்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் நுழைய விரும்பவில்லை. பொதுத்துறை நிறுவனங் களோடு இணைந்து செயல்பட பன்னாட்டுக் கழகங்கள் தயங்கியதை குறிப்பிட்டுக் கூறலாம்.

**[4] அன்னியச் செலாவணி இழப்பு:** பன்னாட்டுக் கழகங்கள் ஏற்றுமதியின் மூலம் அன்னியச் செலாவணியைத் தேடித் தருவதுபோல் வெளிப்படையாக தோன்றினாலும், உண்மையில் அவை அன்னியச் செலாவணியைத் தேடித்தந்ததைவிட, இறக்குமதிகளுக்கு அவை செலுத்திய அன்னியச் செலாவணி அதிகமாகும். 1970-71 முதல் 1979-80 வரை பத்தாண்டுக்காலத்தில் பன்னாட்டுக் கழகங்கள் ஏற்றுமதியின் மூலம் தேடிய அன்னியச் செலாவணியைவிட இறக்குமதியின் மூலம் அதிகமாகச் செலுத்திய அந்நியச் செலாவணி ரூ.1,089 கோடி என திரு. மோகனன் என்பவர் ஆராய்ந்து மதிப்பிட்டுக் கூறியுள்ளார்.



**[5] வெளிநாட்டிற்கு மிகுதியாக அனுப்புதல்:** டாக்டர் கே. என்.ராஜ்; டாக்டர் பி.ஆர் பிரமானந்தா ஆகியோர் பன்னாட்டு நிறுவனங்கள் ஆண்டுதோறும் இலாபத்தில் பங்குத் தொகையாகவும், தொழில் நுட்பச் சேவைக்குக் கட்டணமாகவும்,உரிமத் தொகையாகவும் அனுப்புவதைக் கணக்கிட்டால் மிகவும் அதிகமாக இருப்பதனை உணர்த்துகின்றனர். இவை ஈடுசெய்ய இயலாத அன்னியச் செலாவணி வெளியேற்றமாக இருப்பதன்பாதக விளைவைச் சுட்டிக்காட்டலாம்.

**[6] இந்தியத் தொழிலாளர்கள் நலன் புறக்கணிப்பு:** நமது நாட்டிலுள்ள பெரும்பாலான பன்னாட்டுக் கழகங்களில் உயர் பதவிகளில் வெளி நாட்டினரே உள்ளனர். இந்தியர்களை குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்களாக வேலைக்கமர்த்துகின்றனர். இதனால் இந்தியத் தொழிலாளர்களின் நிலை உயரவில்லை.

**[7.] சார்ந்திருத்தல்:** பன்னாட்டுக் கழகங்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் துறைகளில் எல்லாம் இந்தியா தன்னிறைவு அடையவில்லை. இந்தக்கழகங்களுக்குச் சொந்தமான நாடுகளின் பொருளாதார ஆதிக்கத்தின் கீழ் நாடு வரக்கூடிய ஆபத்து வளர்ந்து வருகின்றது.

**பன்னாட்டுக் கழகங்களைக் கட்டுப்படுத்துதல்:** இந்திய அரசு பன்னாட்டுக் கழகங்களின் செயல்பாட்டில் உள்ள குறைகளை உணர்ந்து, அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கின்றது. அவற்றில் முக்கியமானவற்றை இங்கு குறிப்பிடலாம்.

**1. வரி விதிப்பு:** பல்நோக்கு வரிவிதிப்பின் மூலம் பன்னாட்டுக் கழகங்கள் பெறுகின்ற இலாபத்தையும், வழங்குகின்ற காப்பீட்டுத் தொகையையும் அரசு கட்டுப் படுத்துகின்றது.

**2. அயல் நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு:** அன்னியச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம் (Foreign Exchange Regulation Act) பன்னாட்டுக் கழகங்கள் வைத்திருக்கும் சொத்துடைமையை குறைத்துக் கொள்ளக் கூறுகின்றது. இவற்றில் இந்தியர்களின் பங்களிப்புக் கூட இந்தச்சட்டம் வழிவகுக்கின்றது.

**3. அனுமதிக்காலம் குறைப்பு:** பன்னாட்டுக் கழகங்கள் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை அரசின் அனுமதி பெற வேண்டுமென இருந்ததை, இப்பொழுது ஐந்தாண்டுக்கு ஒருமுறை அனுமதி பெற வேண்டுமென்று மாற்றிவிட்டனர். இதனால் வெளிநாட்டு நிறுவனங்கள் அடக்கத்தோடு செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**4. உற்பத்திக் கட்டுப்பாடு:** பன்னாட்டுக் கழகங்களின் உற்பத்தியிலும், தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் முறையிலும் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்துள்ளனர். நமது நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய பொருளை பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்ய அனுமதிப்

பதில்லை. மேலும், தேவையற்ற பொருட்களை உற்பத்தி செய்ய வெளி நாட்டுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தவும் அனுமதி மறுக்கின்றனர்.

**5. கட்டாயம் ஏற்றுமதி:** பன்னாட்டுக் கழகங்கள் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு உச்ச வரம்பு இல்லை. வேண்டிய மட்டும் ஏற்றுமதி செய்யலாம். ஆனால் குறைந்தது ஓரளவாவது ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இருக்கின்றது. இதனால் ஒவ்வொரு பன்னாட்டு நிறுவனமும் ஏற்றுமதியில் தனிக்கவனம் செலுத்துகின்றது.

# 35. அன்னிய மூலதனம்

வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக மூலதனப் பற்றாக்குறை இருக்கின்றது. போதுமான மூலதனம் இல்லாமல், வறுமையின் நச்சுவட்டத்தை உடைத்துக் கொண்டு, விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற முடியாது.

மூலதனத்தைப்பெற, ஒன்று, உள்நாட்டு மூலதனத்தைப் பெருக்க வேண்டும். அல்லது, மற்றொன்று பற்றாக்குறையை ஈடுகட்ட அன்னிய மூலதனத்தைப்பெற வேண்டும். அன்னிய மூலதனத்தின் தேவையையும், அதிலுள்ள வரையறைகளையும் அறிந்து கொள்வது இந்தியப் பொருளாதார வளர்ச்சியைப் புரிந்து கொள்ளத் துணை செய்யும்.

## I. அன்னிய மூலதனத் தேவை

இந்தியா போன்ற வளர்கின்ற நாடுகளின் அன்னிய மூலதனத் தேவையைச் சுட்டிக்காட்டலாம்.

**1. இறக்குமதித் தேவை:** விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற எந்திரங்களையும், கருவிகளையும், மூலப்பொருட்களையும், தொழில் நுட்ப அறிவையும் வெளிநாடுகளிலிருந்து பெற வேண்டியுள்ளது. இவற்றைப் பெற ஏற்றுமதி மூலம் போதுமான அன்னியச் செலாவணியை ஈட்ட முடியாத நிலையில், அன்னிய முதலீட்டைப் பெறுதல் தேவையாகின்றது. அன்னிய முதலீடு, அன்னியச் செலாவணியாக வருவதால் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டியவற்றை இறக்குமதி செய்துகொள்ள முடிகின்றது.

**2. உள்நாட்டு மூலதனப் பற்றாக்குறை:** வளரும் நாடுகளின் மூலதன ஆக்கம் குறைவாக உள்ளது. மக்களின் வருவாயும் சேமிப்பும் குறைவாக இருப்பதால் மூலதன ஆக்கமும் குறைவாக உள்ளது. பற்றாக்குறையாக இருக்கும் மூலதனத்தை ஈடுகட்ட ஏற்ற முறையாக அன்னிய மூலதனம் இருக்கின்றது.

**3. சேர்ந்து கிடைப்பவை:** அன்னிய மூலதனம் வருகின்ற பொழுது, அதனோடு இணைந்து பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தொழில் நுட்பம், வாணிபத் திறமை, அனுபவம் ஆகியவை வருகின்றன. இவற்றை தனியே பெற முடியாது.



**4. சேமிப்பைக் கூட்ட:** மக்களின் வருவாயைக் கூட்டாமல் சேமிப்பையும், மூலதனத்தையும் பெருக்க முடியாது. முதலீட்டைக் கூட்டினால் தான் மக்களின் வருவாய் உயரும். மூலதன ஆக்கம் ஏற்படும். இதற்குத் தொடக்ககால முதலீடாக அன்னிய முதலீடு கைகொடுக்கின்றது.

**5. தொழில்களை வளர்க்க:** நாட்டில் திட்டங்கள் தீட்டி தொழில்களை வளர்க்க மூலதனம் தேவை. தொடக்க காலத்தில் உள் நாட்டு மூலதனம் இதற்குப்போதுமானதாக இருக்காது. இந்த நிலையில் வெளிநாட்டு மூலதனம் தொழில் வளர்ச்சிக்குத் துணை செய்கின்றது.

**6. மூலவளங்களைப் பயன்படுத்த:** நாட்டிலிருக்கும் மூலவளங்களைப் பயன்படுத்த மூலதனம் தேவை. இந்த மூலதனத்தை அன்னிய மூலதனமாகப் பெறுகின்றபொழுது, மூலவளங்களைச் சரியாகப் பயன்படுத்த முடிகின்றது.

**7. அகக்கட்டுமானங்களை உருவாக்க:** வளர்ச்சி குறைந்த நாடுகளில் இரயில்கள், மின்சாரம், சாலைப் போக்குவரத்து போன்ற அகக் கட்டுமானங்கள் போதுமான அளவில் இல்லை. அவற்றை உருவாக்க நிறைய மூலதனம் தேவை, அன்னிய மூலதனம் அகக்கட்டுமானங்களை உருவாக்கத்துணை செய்கின்றது.

## II. அன்னிய மூலதனத்தின் வகைகள்

**வகைகள்:** நமது நாட்டிற்குக் கிடைக்கின்ற அன்னிய முதலீட்டைக் கீழ்க்கண்ட வகைகளில் பிரிக்கலாம்.

**1. நேரடி முதலீடு (Direct Investment):** வெளிநாட்டிலிருந்து நேரடியாக தொழில், வாணிபத்தில் நமது நாட்டில் முதலீடு செய்யலாம். வளர்ச்சி பெற்ற நாடுகளில் இதற்காகவே நிறுவனங்களை அமைத்து, அவை இங்கு கிளைகள் அல்லது துணை நிறுவனங்களின் மூலம் முதலீடு செய்கின்றன. சில வேளைகளில் வெளிநாட்டினர் நேடியாக இங்குள்ள நிறுவனங்களின் பங்குகள், கடன் பத்திரங்களில் முதலீடு செய்யலாம்.

**2. அன்னியர் இணைந்த முதலீடுகள்(Foreign Collaborations):** சமீப காலத்தில் வெளிநாட்டு முதலும் இந்திய முதலும் இணைந்து தொழில் முறையில் ஈடுபடும் போக்கு காணப்படுகின்றது. இத்தகைய முதலீட்டை இந்திய அரசு ஊக்குவிக்கின்றது. இப்படிப்பட்ட இணைந்த முதலீடுகள் (i) வெளிநாட்டு தனியாரும் இந்தியத் தனியாரும் இணைந்து முதலீடு செய்வதாகவோ; (ii) வெளிநாட்டு நிறுவனங்களும் இந்திய

Scanned with CamScanner